THE COURT OF DISTRICT MUNSIF, KATPADI, VELLORE DISTRICT.

O.S.No. 36 /2014

Deposition of witness for PW1

| | | | |
|---|---|---|---|
| Name | : மல்லிகா | Caste | : - |
| Husband's Name | : ரவி | Calling | : - |
| Village | : ஜாப்ராபேட்டை | Religion | : இந்து |
| Taluk | : - | Age | : 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 28 day of January , 2019.

Cross Continuation

எனது தாயார் எனக்கு 12.4.1999 தேதியிட்ட ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி வைத்தார் என்றால் சரிதான். அது எவ்வளவு விஸ்தீரண நிலத்திற்கு எழுதப்பட்டது என்றால் 20 செண்ட் ஆகும். வழக்கு சொத்தில் நெல் மற்றும் தானியங்கள் பயிர் செய்வதாக நான் கூறியுள்ளேன் என்றும் அதற்கான அடங்கல் ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது தந்தையார் கோவிந்தராஜமந்திரி எனது சகோதார் சுப்பிரமணியமந்திரிக்கு 30.09.1993 தேதியிட்ட உயில் ஒன்றை எழுதி வைத்தார் என்றால் அதுபோல் எதுவும் இல்லை. தற்பொழுது என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் பதிவு செய்யப்பட்ட உயில் ஆவணம் என்றால் எனக்கு படிக்க தெரியாது அதுபோல் எனது தந்தையார் எதுவும் எழுதவில்லை. பதிவு அலுவலகத்தில் மேற்படி உயில் சாசனம் செல்லாது என ஏதேனும் மனு கொடுத்துள்ளேனா என்றால் கொடுத்துள்ளேன் அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நான் பதிவு அலுவலகத்தில் மேற்படி மனு கொடுத்தற்கு எனக்கு என்ன பதில் கொடுத்தார்கள் என்றால் அவர்கள் பதில் எதுவும் கொடுக்கவில்லை. பதிவு அலுவலகத்திலிருந்து நான் தாக்கல் செய்த ஆவணமான வா.சா.ஆ15 பதில் கொடுக்கப்பட்டுள்ளது என்றும், நானும் மற்ற மனுதாரர்கள் மனுவில் கூறியுள்ள காரணங்களுக்காக பதிவை நிறுத்தி வைக்க பதிவு விதிகளில் அதில் இடமில்லை என அதில்

குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தாயார் ஜெயம்மாள் எனது சகோதாரர் சுப்பிரமணி பெயருக்கு பதிவு செய்யப்பட்ட ஒரு செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துள்ளார் என்றால் அதுபோல் எதுவும் இல்லை. எனது மூத்த சகோதரிகளான பொற்கொடி, கிருஷ்ணவேணி மற்றும் தனபாக்கியம் ஆகியோருக்கு பிரித்து கொடுக்க வேண்டிய பங்கை ஏற்கனவே பிரித்து கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல. எனக்கு சேரவேண்டிய பங்கையும் எனது தாயார் எனக்கு செட்டில்மெண்ட் பத்திரம் எழுதி கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. எனது கணவர் வாங்கிய கடனுக்காகத்தான் அந்த செடடில்மெண்ட்பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டது. எனது கணவர் கடன் வாங்கியதற்கு ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். எனக்கு திருமணம் ஆகி 30 வருடங்கள் ஆகிறது வருடம் நினைவில் இல்லை. எனக்கு 1981-ல் திருமணம் நடந்தது என்றால் எனக்கு தெரியாது. வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனக்கு ஏற்கனவே பாகம் பிரித்து கொடுக்கப்பட்டது என்றும், எனது சகோதரிகளுக்கு சேரவேண்டிய பங்கை அவர்களுக்கு பிரித்து கொடுத்து அதை அவரது வாரிசுகள் பாகம் பிரித்துகொண்டு தற்பொழுது அனுபவித்து வருகின்றனர் என்றால் சரியல்ல அது செல்லாது. நான் கேட்டுள்ள பாகப்பிரிவினையின் விகிதாச்சரம் சரியல்ல என்றால் தவறு. இந்த வழக்கு எனது கணவர் ரவி என்பவரின் தூண்டுதலின்பேரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனக்கு இதில் எந்த சம்மந்தமும் இல்லை. எனக்கு கொடுக்கவேண்டிய பங்கையும் ஏற்கனவே கொடுத்துவிட்டார்கள் என்றால் சரியல்ல. இந்த சொத்தில் உரிமையுள்ளது என குறிப்பிடும் வகையில் எந்த ஆவணமும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் எனக்கு எந்த உரிமையில்லை. வழக்கில் நான் கோரியுள்ள பரிகாரம் தவறு, வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

(Sd/-)..V.Vannamalar
DISTRICT MUNSIF
KATPAD I.